**கண்காணிப்புபொறியாளர், பொபது,நீஆது., சிறப்பு திட்ட வட்டம், திருச்சி-1**
**அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: பொறி.மு.சுப்ரமணியன், பி.இ.,**
**கண்காணிப்புபொறியாளர்,பொபது,நீஆது.,**

**செ.மு.எண். நிஎ1/ (282/2020)/2021/ நாள்: 16 .11.2021**

பொருள்: பணியமைப்பு - பொபது., - த.நா.அ.பணித் தொகுதி - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய 2018-2019, 2019-2020ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு (தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய வரிசை எண்:40/2018-2019, 2019-2020) பணிபுரிந்து வரும் திருமதி த.அ.நித்யா (பிறந்த தேதி 05.07.1990) என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும் மற்றும் தகுதிகாண் பருவம் துவங்கியும் ஆணை வழங்குதல்.

பார்வை:

5. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் க.எண்: 24962/PSD-I/2020 நாள்:29.05.2020.
6. முதன்மை தலைமை பொறியாளர், மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீஆது., சென்னை அவர்களின் செ.மு. ஆ. எண்: எஸ் 3(3) / 35935/2020 நாள்:17.09.2020.
7. தலைமைப் பொறியாளர்,பொ.ப.து நீ.ஆ.து., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செ.மு.ஆ.எண்:சி2/6367/2020/நாள்:21.09. 2020.
8. இவ்வலுவலக செ.மு.ஆ.எண்:நிஎ1/282(283)/2020/நாள்:29.09. 2020.

*****

பார்வை 2-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019, 2019-2020ஆம் ஆண்டிற்கான போட்டித் தேர்வு தொகுதி-IVல் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.த.அ.நித்யா (தமிழ்நாடு அரசு பணியாளர் வரிசை எண்: 40/2018-2019, 2019-2020) பார்வை 3 முதல் 5 முடிய காணும் செயல்முறை ஆணைகளின்படி பணிநியமனம் செய்யப்பட்டு இவ்வட்ட அலுவலகத்தில் 01.10.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

தனியர் இப்பதவியில் பணியேற்று கடந்த ஓராண்டில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படவில்லை, ஓராண்டு பணிக்காலம் நிறைவு செய்துள்ளார். எனவே, திருமதி.த.அ.நித்யா, இளநிலை உதவியாளருக்கு அவர் அப்பதவியில் முதன்முதலாக பணியேற்ற நாளான 01.10.2020 முற்பகல் முதல் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016ல் உள்ள பணிவிதி 28(1)ன் கீழ் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இதனைத் தொடர்ந்து திருமதி.த.அ.நித்யா, இளநிலை உதவியாளருக்கு இப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 01.10.2020 முற்பகல் முதல் தொடர் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவம் துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

(த.பி.பா)

தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின் விதி எண்:32-ன்படி தனியர் தனது தகுதிகாண் பருவத்தை மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகளில் நிறைவு செய்திட வேண்டும். மேலும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி எண் 34(a) இணைப்பு-5-ல் கண்டுள்ளவாறு தகுதிகாண் பருவக் காலத்திறகுள் பவானிசாகர் அரசுப்பணியாளர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பெறும் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் தகுதிகாண் பருவ காலத்தில் வழக்குகள், தண்டனைகள் மற்றும் அசாதாரண விடுப்புகள் ஏதும் நிலுவையில் மற்றும் துய்க்காமல் இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையாக உள்ள வழக்கின் தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் இப்பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

தனியருக்கு தகுதிகாண்பருவம் நிறைவாணை வழங்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்து ஊதிய உயர்வுகளைப் பெறத் தகுதியுடையவராவார்.

இணைப்பு: பிற்சேர்க்கை-1

பெறுநர் :

திருமதி.த.அ.நித்யா, ,
இளநிலை உதவியாளர்,
சிறப்பு திட்ட வட்டம்,
பொபது., நீஆது.,
திருச்சி-01.

16/11/24

கண்காணிப்பு பொறியாளர்,பொபது,நீஆது.,
சிறப்பு திட்ட வட்டம், திருச்சி.

16/11/2024

## பிற்சேர்க்கை

| வ.எண். | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வரிசை எண். | பெயர் / பிறந்த தேதி / பதவி | முதன்முதலில் பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் | தகுதிகாண் பருவம் துவங்கப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 40 / 2018-2019, 2019-2020 | திருமதி.த.அ.நித்யா<br>05.07.1990<br>இளநிலை உதவியாளர் | 01.10.2020 மு.ப. | 01.10.2020 மு.ப. | 01.10.2020 மு.ப. |

16/11/2024

கண்காணிப்பு பொறியாளர்,பொபது,நீஆது.,
சிறப்பு திட்ட வட்டம், திருச்சி.

16/11/2024